3rd September 1959]

Utilization of waters of the Krishna and Godavari

* 97 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் ௵ பிப்ரவரி ௴ 25-ம் ௳ வடாற்காடு மாவட்ட திட்டக் குழுக் கூட்டத்தில் கிருஷ்ணா, கோதாவரி நீரை நீர்ப்பாசனத்திற்காக உபயோகப்படுத்த முயற்சிக்கவேண்டுமென்று நிறைவேறிய தீர்மானம் அரசாங்கத்துக்கு வந்ததா ?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) It is too early to consider the suggestion, viz., taking up the diverted waters to the North Arcot district, as the question of diversion of the waters of the Godavari and Krishna itself is still under the active consideration of the Southern Zonal Council.

SRI S. M. ANNAMALAI : சார், கோதாவரி, கிருஷ்ணா நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதைப்பற்றி தென் மண்டல கௌன்சிலில் பேசப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : தென் மண்டலக் கௌன்சிலில் இதைப் பற்றி பேசி இருக்கிறது. பிறகும் இதைப்பற்றி பேசப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI S. LAZAR : தென் மண்டலக் கௌன்சிலில் பேசியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன கோரிக்கையை அரசாங்கம் விடுத்திருக்கிறது ? அதற்கு, நதிகள் ஓடக்கூடிய அரசாங்கம் என்ன பதில் சொல்லியிருக்கிறது. இப்பொழுது தென் மண்டல கௌன்சில் எப்பேற்ப்பட்ட கவனம் செலுத்தியிருக்கிறது.

THE HON. SRI P. KAKKAN : ஹைதராபாத்தில் கூடிய தென் மண்டல கௌன்சிலில், ஆந்திர மாகாண முதன் மந்திரி, அந்த மாகாண சீப் இன்ஜினீயரை எவ்வளவு தண்ணீர் கொடுக்க முடியும் என்று பரிசீலனை செய்யும்படி சொன்னார். அது பரிசீலனை செய்யப்பட்ட பிறகு தான் மண்டலக் கௌன்சிலில் முடிவு செய்யப்படும்.

SRI K. VINAYAKAM : அதிகாரிகள் பரிசீலனை செய்து முடிவு செய்வதில் சென்னை சர்க்காருக்கு வேண்டிய தண்ணீரைக் கொடுப்பதற்கு வேண்டிய மனப் பக்குவம் ஆந்திர சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறதா என்று அரசாங்கம் சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஆந்திர மாகாண முதன் மந்திரி மனப் பக்குவம் ஏற்பட்டுத்தான் எவ்வளவு தூரம் தண்ணீர் உதவி செய்ய முடியும் என்று பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலனை செய்த பிற்பாடு தான் அவர்கள் முடிவு தெரியக்கூடும்.

SRI T. KARIA GOUNDER : தலைவர் அவர்களே, இதனால் வட ஆற்காடு மாவட்டம் மட்டும்தான் பயன்பெறுமா அல்லது வேறு மாவட்டங்களும் பயன் பெறுமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது எந்தெந்த மாவட்டங்கள் எல்லாம் பயன்பெறும் என்று சொல்ல முடியாது. முக்கியமாக வட ஆற்காடு மாவட்டமும் செங்கல்பட்டு மாவட்டமும் பயன்பெறும் என்று சொல்ல முடியும்.

SRI S. LAZAR : ஸர், ஆந்திர சர்க்கார் அவர்களுடைய இன்ஜினியரை அனுப்பி இதைப்பற்றி பரிசீலனை செய்ய விருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அப்படி யில்லாமல் இதைப்பற்றி மத்திய சர்க்காரிடம் சொல்லி அவர்கள்

மூலமாக ஒரு தனிப்பட்ட இன்ஜினியரை அனுப்பி பரிசீலனை செய்யவோ அல்லது சென்னை ஆந்திரா இரண்டு சர்க்கார்களும் சேர்ந்து ஒரு இன்ஜினியரை அனுப்பி புள்ளி விவரங்களை சேகரிப்பதற்கோ அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON SRI P. KAKKAN : இதைப்பற்றி எல்லாம் ஸோனல் கவுன்ஸிலில் பேசித்தான் முடிவு செய்ய வேண்டும்.

Taxis and Auto-rickshaws

* 98 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு தாலூகாவிலும் எத்தனை மோட்டார் டாக்ஸிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன ?

(ஆ) எந்தெந்த இடங்களிலே ஆட்டோ ரிக்ஷாக்கள் எத்தனை எத்தனை ஓடிக்கொண்டிருக்கின்றன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*)—

	Big Taxis.	Baby Taxis.
Coimbatore taluk	25	35
Gobichettypalayam	Nil.	2
Bhavani taluk	1	Nil.
Udumalpet taluk	1	Nil.
Pollachi taluk	Nil.	6
Erode taluk	22	2
Sathiamangalam taluk	2	1
	51	46

(*b*)—

Coimbatore	168
Tirupur	5
Pollachi	3
	176

SRI P. G. MANICKAM : ஸார், இப்போது இந்த ஜில்லாக்களில் ஓடிக்கொண்டிருக்கின்ற எந்த டாக்ஸியிலும் எந்த ஆட்டோ ரிக்ஷாவிலும் மீட்டர்கள் பொருத்தப்படாமல் இருக்கின்றனவா ? இதனால் இந்த டாக்ஸிகளை அமர்த்தும்போது இதிலுள்ள ட்ரைவர்கள் கேட்கக்கூடிய தொகைதான் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே எல்லா டாக்ஸியிலும் மீட்டர்கள் உடனடியாக பொருத்தவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

THE HON SRI V. RAMAIAH : இதைப்பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டது. ஆனால் எல்லா டாக்ஸிகளிலும் பொறுத்துவதற்கு வேண்டிய அளவு, போதுமான மீட்டர்கள் கிடைக்காத காரணத்தினால் தான் இதை கண்டிப்பாக அமல் நடத்த முடியாமல் இருக்கிறது.

SRI S. LAZAR : மீட்டர்கள் பொறுத்துவது சம்பந்தமாக இந்த அரசாங்கம் இதற்கு முன்பு உறுதி கொடுத்திருக்கிறது. இதற்காக இரண்டு மூன்று கம்பெனிகள் வேண்டிய அளவு மீட்டர்கள் தரலாம் என்று சொல்லுகிறார்கள் என்பது உண்மையா ? அப்படியானால் அந்த கம்பெனிகளிடமுள்ள எல்லா மீட்டர்களையும் உபயோகப்படுத்த அரசாங்கம் முன் வருமா ?